(Under Section 173 BNSS) **FIRST INFORMATION REPORT**
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318771

1. District : திருப்பூர் PS: உடுமலை Year: 2025 FIR No.: 09/25 Date: 26.01.25
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended Act 2018 Sections பிரிவுகள்: 5(1) 7

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் 05.09.25 நாள் முதல் நாள் வரை

Time Period : சுமார் 12.30 Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.09.25 நேரம் 07.00

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 26.09.25 நேரம் 08.00

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 4 கி.மீ. வடக்கு

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி சரவணா அகம், கிராம நிர்வாக அலுவலகம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : J. அண்ணாமலை (b) Father's/ Husband's Name : ராமசாமி
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 55/25 (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : 177, மெயின் ரோடு, உகக்கரவாண்டி கிராமம்,
தொழில் முகவரி உகக்கரவாண்டி பட்டம், திருப்பூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

சரவணா அகம், கிராம நிர்வாக அலுவலர் திரு. ரமேஷ்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதமில்லை -

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

அய்யா,

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

J. Anne 26/9/25

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
26.09.25

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

26.09.25 - 09.15

Name: பெயர் N ரா.ஸ்ரீ.
Rank: நிலை ..... No. எண்
காவல் உதவி ஆய்வாளர்,
பெரியகுளம்

Submitted: On 26.09.2025 at about 07.00 hrs, while I was in my office, one Tr.J.Annamalai, S/o.Jayaraman, 117, Main road, Vikiravandi, Vikiravandi Taluk, Villupuram District approached my detachment office and lodged a written complaint which read as follows:- அனுப்புநர் J.அண்ணாமலை வ/55,த/பெ.ஜெயராமன், 177,மெயின்ரோடு, விக்கிரவாண்டி கிராமம், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். பெறுநர்,காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம்.அம்மா, நான் விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டம், விக்கிரவாண்டி கிராமம் எனது சொந்த ஊராகும். நான் தற்போது விழுப்புரம் கிழக்கு பாண்டி ரோடு, LIC அருகில் உள்ள கேசவன் தெருவில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் விழுப்புரம் வட்டம், சாலை அகரம் கிராமம், கணித விஞ்ஞான ஜோதிட கவிஞர் கண்ணப்பனார் நகர் மனைப்பிரிவில், சர்வே எண் 154/5Bல் (பழைய சர்வே எண் 154/5) 0.62 சென்டில் 2370 சதுர அடி கொண்ட மனை எண்.10 னை, விழுப்புரம் நகரம், புதுத்தெருவை சேர்ந்த ராமலிங்கம் மகன் முரளி என்பவரிடமிருந்து கடந்த 03.09.2025-ம் தேதி விழுப்புரம இணைசார்பதிவாளர்-1 அலுவலக ஆவண எண்.2698/2025-ன் படி எனது மகள் அருள்பிரபா என்பவரின் பெயரில் கிரையம் பெற்றேன். மேற்படி நான் மனைக்கு பட்டா மாற்றுவதற்கான கட்டணம் அனைத்தையும் கிரையம் வாங்கும் போதே சார்பதிவாளர் அலுவலகத்தில் செலுத்திவிட்டேன். அதன் பிறகு 08.09.2025-ம் தேதி சுமார் 12.30 மணிக்கு மனை வாங்கியது சம்மந்தமான அனைத்து ஆவணங்களையும் எடுத்து வந்து கொடுக்குமாறு சாலை அகரம் VAO சதீஷ் என்னிடம் போனில் கேட்டார். அதனால் நான் கிரையம் பெற்ற மனையின் ஆவணங்கள் அனைத்தையும் அன்றைய தினமே கொண்டு போய் சாலை அகரம் VAO அலுவலகம் சென்று VAO சதீஷ் என்பவரிடம் நேரில் கொடுத்தேன். அப்போது அவர் உனது மனையை பட்டா மாற்றி கொடுப்பதற்கு 30 ஆயிரம் ரூபாய் செலவாகும் ரெடி பண்ணி வைங்க என்று சொன்னார். அதற்கு நான் சரிங்க சார் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். அதன்பிறகு 12.09.2025-ம் தேதி மாலை சுமார் 05.20 மணிக்கு எனக்கு போன் செய்த சாலை அகரம் VAO சதீஷ் விழுப்புரம் வட்டாட்சியர் அலுவலக இசேவை மையத்திற்கு அருகே வரச்சொன்னார். அவர் சொன்னபடி நான் விழுப்புரம் வட்டாட்சியர் அலுவலகம் சென்று சாலை அகரம் VAO சதீஷை சந்தித்தபோது நான் கேட்ட பணத்தை ரெடி பண்ணிட்டிங்களா என்று கேட்டார். அதற்கு நான் பணம் இன்னும் ரெடி பண்ணல என்று சொன்னேன். அதற்கு அவர் பணம் கொடுத்தால் மட்டுமே உங்க மகளின் பெயருக்கு பட்டாவில் அளவு திருத்தத்தோடு பட்டா மாறும் என்று சொன்னார். அதன் பின்பு சாலை அகரம் VAO சதீஷ் எனக்கு பலமுறை போன் செய்தார். நான் அவரது போனை எடுக்கவில்லை. அதன் பின்பு மீண்டும் கடந்த 23.09.2025 -ம் தேதி மாலை சுமார் 06.00 மணிக்கு சாலை அகரம் கிராம உதவியாளர் பாஸ்கர் எனக்கு போன் செய்து VAO சதீஷ் சார் உங்களை விழுப்புரம் கோட்டாட்சியர் அலுவலகம் அருகே வரச்சொன்னதாக தகவல் சொன்னார். அவர் சொன்னது போல நான் விழுப்புரம் கோட்டாட்சியர் அலுவலகம் அருகே சென்று VAO சதீஷை பார்த்தபோது உங்கள் மகளின் மனையினை பட்டா மாற்றுவதற்கு 30 ஆயிரம் ரூபாய் வேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை சார் என்று சொன்னேன். அதற்கு அவர் உனக்காக 10 ஆயிரம் ரூபாய் குறைத்துக்கொள்கிறேன். 26.09.2025-ம் தேதி, 20 ஆயிரம் ரூபாய் பணம் எடுத்து வந்து கொடுங்கள். நான் உங்களின் மகள் பெயருக்கு உடனே பட்டா மாற்றம் செய்து

தந்துவிடுகிறேன் என்று சொன்னார். அதற்கு நான் சரிங்க சார் என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். வீட்டிற்கு வந்து யோசித்து பார்த்தபோது சாலை அகரம் VAO சதீஷ்க்கு லஞ்சம் கொடுத்து எனது மகளின் மனைக்கு பட்டா மாற்ற எனக்கும் எனது மகளுக்கும் விருப்பம் இல்லை. எனவே, விழுப்புரம் லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகம் வந்து நான் தயார் செய்து கொண்டு வந்த புகார் மனுவினை இன்று தங்களிடம் கொடுக்கின்றேன். எனவே, பட்டா மாற்றம் செய்ய ரூ.20,000/- லஞ்சமாக கேட்கும் சாலை அகரம் VAO சதீஷ் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd xxxxxx (J.Annamalai) நாள்:26.09.2025.

Sir,

Received the above written complaint on 26.09.2025 at about 07.00 hrs. The genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Villupuram Vigilance and Anti-Corruption Cr.No.09/2025/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 08.00 hrs today on 26.09.2025 and took up for Investigation. on 26.09.2025 (N.Eswari) Inspector of Police, V&AC, VPM.

The original FIR along with a the original written complaint in a sealed cover are sent to the Special Judge for The Prevention of Corruption Act cases / Principal District Session Judge Villupuram and a copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

(N.Eswari) 26.09.25
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Villupuram.